# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2048 • ஜூன் 10, 2017 Weekly E-paper • June 10, 2017


# குடியரசுத் தலைவர் தேர்தலும் தமிழக அரசியலும்

சுப. வீரபாண்டியன்

தமிழ்நாட்டின் ஆளும் கட்சியான அதிமுகவில், ஒரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இரண்டு அணியாக இருந்த அந்தக் கட்சி, இப்போது மூன்று அணியாக உடைந்திருக்கிறது. ஜெயலலிதா உயிரோடு உள்ளவரை, அவர் மட்டுமே அந்தக் கட்சிக்குத் தலைவராக இருந்தார்... இன்று எல்லோரும் தலைவர்களாகிவிட்டார்கள். எந்த ஒருவரின் தலைமையின் கீழும் இனி அந்தக் கட்சி ஒருங்கிணைய முடியாது என்னும் நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால், மூன்று அணிகளுமே, ஆட்சிக்கு ஆபத்து ஏதுமில்லை என்னும் பல்லவியை மட்டும் திரும்பத் திரும்பப் பாடிக்கொண்டிருக்கிறார்கள். ஆட்சி இருந்தால்தான் பணத்தையும், பதவியையும் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

இந்தச் சூழலில்தான், வரும் 14ஆம் தேதி தமிழ்நாடு சட்டமன்றம் கூடுகிறது. காங்கிரஸ் கட்சித் தலைவர்களுள் ஒருவரான ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் சொல்லியிருப்பது போல, இது அவர்களின் கடைசிச் சட்டமன்றக் கூட்டமாகவும் இருக்கலாம். மூன்று அணியில் யார் ஒருவருக்கும் பெரும்பான்மை இல்லை என்று ஆகிவிட்டது. வர இருக்கும் சட்டமன்றத் தொடரோ மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான தொடர். எனவே, நிதி தொடர்பான சட்ட முன்வரைவுகள் ஆளும் கட்சியால் கொண்டு வரப்படும்போது, அவை தோல்வியடையுமானால், அமைச்சரவை பதவி விலக வேண்டிய கட்டாயம் நேரும்.

இத்தனை இக்கட்டான நிலைமை இருந்தாலும், ஆட்சிக்கு ஆபத்து ஏதுமில்லை என்று ஆளும் கட்சியினர் கூறுவதற்கு, பின்னால் இருக்கும் பா.ஜ.க.தான் காரணம். இந்த ஆட்சி கவிழ்ந்து போய்விடாமல் பார்த்துக் கொள்வதில், அவர்கள் இப்போது மிகக் கவனமாகவே இருப்பார்கள். அதற்குக் காரணம், ஜூலை 17ஆம் தேதி வரவிருக்கும் குடியரசுத் தலைவர் தேர்தல்தான். அந்தத் தேர்தலில், நாடாளுமன்ற மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் 776 பேரும், இந்தியா முழுவதுமுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் 4,114 பேரும் வாக்களிக்க வேண்டும். வாக்குகளின் மொத்த மதிப்பு, 10 லட்சத்துக்கும் மேலானது. மொத்த வாக்குகளில், இப்போது ஏறத்தாழ 48 விழுக்காடு வாக்குகள் பா.ஜ.க., கூட்டணி வசம் உள்ளன. இதில் சிவசேனாவின் வாக்குகளும் அடக்கம். அதில் ஏதும் சிக்கல் ஏற்படுமானால் அதிமுக வின் வாக்குகள் கண்டிப்பாகத் தேவைப்படும். அதிமுகவிடம் 50 நாடாளுமன்ற மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்களும், 132 சட்டமன்ற உறுப்பினர்களும் உள்ளனர். அவர்களின் வாக்குகளினுடைய மதிப்பு 5 விழுக்காட்டிற்கும் கூடுதல். எனவே, ஆட்சியைக் கவிழ்க்காமல் இருப்பதுடன், கவிழ்ந்து விடாமல் பார்த்துக் கொள்வதிலும் மத்திய அரசு கவனமாக இருக்கும். எனினும் ஜூலை 17க்கு மேல் என்ன நடக்கும் என்பதை இப்போது உறுதியாகச் சொல்ல முடியாது.

எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் உள்ள தமிழக அரசு, தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்குப் பல்வேறு திட்டங்களை அறிவித்துப் பார்க்கிறது. பள்ளிக் கல்வியில் சில மாற்றங்கள், பல இலவசத் திட்டங்கள், நில வழிகாட்டி மதிப்புக் குறைத்தல் முதலான பல அறிவிப்புகள் வந்தவண்ணம் உள்ளன. ஆனால், எந்த ஒரு திட்டம் நிறைவேற வேண்டுமானாலும், மானியக் கோரிக்கைகள் முதலில் நிறைவேற்றப்பட்டாக வேண்டும். பொதுவாக, நிதிநிலை அறிக்கைத் தொடர் என்பதுதான், சட்டமன்றத் தொடர்களிலேயே மிக நீளமானது. வழக்கமாக, நாற்பது நாள்களுக்குக் குறையாமல் அத்தொடர் நடைபெறும். ஆனால் இம்முறை மார்ச் 16ஆம் தேதி தொடங்கிய தொடர், 24ஆம் தேதியே முடிந்து விட்டது. ஆர்.கே. நகர்த் தொகுதி இடைத்தேர்தலும், வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தல்களும் சட்டமன்றத் தொடர் ஒத்தி வைக்கப்படுவதற்கான காரணங்களாகச் சொல்லப்பட்டன. அவை இரண்டுமே நடைபெறவில்லை. ஒத்திவைக்கப்பட்ட தொடரும் முடித்து வைக்கப்பட்டு, மீண்டும் வரும் 14ஆம் தேதி நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



இன்றைய தமிழக அரசு, அறிவிப்பளவில், வெளியிட்டுள்ள திட்டங்களும் கூட, போலியானவையாகவும், ஏமாற்றுத்தன்மை உடையனவாகவும் இருக்கின்றன. குறிப்பாக, நில வழிகாட்டி மதிப்பு 33 விழுக்காடு குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பத்திரப்பதிவு கட்டணம் 3 விழுக்காடு கூட்டப்பட்டுள்ளது. இரண்டையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால், மக்களுக்கு லாபம் எதுவுமில்லை. இப்படித்தான் இந்த அரசின் அறிவிப்புகள் இருக்கின்றன.

தமிழகத்தைச் சூழ்ந்திருக்கும் இருள் விலகி, வானில் உதயசூரியனின் கீற்றுகள் தோன்றும் நாளை மக்கள் எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர்.

•

## கீழடி ஆய்வுக் கருத்தரங்கம்

நாள் : 22.06.2017 வியாழன் மாலை 6 மணி

இடம் : கவிக்கோ அரங்கம், ஆழ்வார்ப்பேட்டை, சென்னை

தலைமை : தோழர் சுப. வீரபாண்டியன் (பொதுச்செயலாளர், தி.இ.த. பேரவை)

கருத்துரை : எழுத்தாளர் சு.வெங்கடேசன் (பொதுச்செயலாளர், த.மு.எ.க.ச)
திரு சொ. சாந்தலிங்கம் (தொல்லியல் ஆய்வாளர்)

தமிழினத்தின் இன்னொரு சிந்து சமவெளி நாகரிகம் கீழடி!

அனைவரும் வருக!

அன்புடன் அழைக்கும்
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keertru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**



**தி**ராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தஞ்சை மாவட்ட இலக்கிய அணிச் செயலாளர், வள்ளுவச் செல்வர், கவிஞர் மானம்பாடி புண்ணியமூர்த்தி அவர்களுக்கு, தி.மு.க. இலக்கிய அணியின் சார்பில் 06.06.2017 அன்று சென்னையில் கலைஞர் விருதும் பொற்கிழியும் வழங்கப்பட்டன.



**த**ஞ்சை மாவட்டம், திருவிடைமருதூரில் 07.06.2017 அன்று தி.மு.க. சார்பில் நடைபெற்ற தலைவர் கலைஞர் பிறந்தநாள் மற்றும் சட்டமன்ற வைர விழாவில் தோழர் சுப. வீரபாண்டியன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.




**05.06.2017** அன்று சென்னையில் நடைபெற்ற சி.நாச்சியப்பனின் பெரியாரும் பெரியோரும் நூல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் தி. இராசகோபாலன், வழக்கறிஞர் அருள்மொழி, திரைப்பட இயக்குனர் எஸ்பி. முத்துராமன், தி.இ.த. பேரவையின் பொதுச் செயலாளர் சுப. வீரபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## தளபதியின் முகம் தெரியும்

**வ**ரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக் கோனுயரும் என்று படித்திருக்கிறோம். இன்று வரப்பும் உயரவில்லை, நெல்லும் உயரவில்லை காரணம் நீராதாரம் இல்லை.

அதனால் நமக்கு நாமே என்ற முறையில் வறண்டு கிடக்கும் ஏரிகள், குளங்கள், ஆறுகள் போன்றவைகளைத் தூர்வாரி நீர் ஆதரத்திற்கு வழிகோலும் விதமாக கழகத் தோழர்களுடன் களத்தில் இறங்கினார் தளபதி ஸ்டாலின்.

முதல்வர் எடப்பாடிக்கு என்ன வந்ததோ தெரியவில்லை நானும் தூர்வாரப்போகிறேன் என்று சொல்லிவிட்டு மேட்டூர் அணைக்குக் கிளம்பினார். கெட்ட புளுகு எட்டே நாளில் என்பதுபோல எட்டே நாளில் திரும்பிவிட்டார் எடப்பாடி. பணி முடங்கியது.



மேட்டூர் அணை என்பதை எளிதாகத் தள்ளிவிட முடியாது. விவசாயிகளின் விளைச்சலுக்கு முக்கிய நீர் ஆதாரம் மேட்டூர் அணை.

இப்பொழுது அணையின் நீர் அளவு 24 அடி மட்டுமே உள்ளது. அணையின் நிலப்பகுதி வெடித்துப் பாளம்பாளமாக கிடக்கிறது. தென்மேற்குப் பருவமழை நீரைத் தேக்கி வைக்கக்கூடிய அளவுக்கு தூர்வாரப்படவும் இல்லை.

அண்டு தோறும் ஜூன் 12ஆம் தேதி குறுவை சாகுபடி விவசாயத்திற்கு நீர் திறந்துவிட வேண்டும். கலைஞர் ஆட்சி காலத்தில் மிகச் சரியாக ஆண்டுதோறும் அதே தேதியில் நீர் திறந்துவிடப்பட்டது.

ஆனால் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த 2011ஆம் ஆண்டு மட்டும் வீம்புக்காக ஜூன் 6ஆம் தேதி முன்கூட்டியே நீரைத் திறந்துவிட்டார். அதற்குப் பிறகு இன்று வரை முறையாக அந்தத் தேதியில் தண்ணீர் திறக்கப்படுவதில்லை.

அ.தி.மு.க அரசு அலட்சியம் காட்டும் இந்நிலையில், தளபதி ஸ்டாலின் அவர்களின் முயற்சியால் தூர்வாரப்படுகின்ற ஏரிகள், குளங்கள், ஆறுகள் போன்றவற்றில் நீராதாரம் வலுப்பெறப்போகின்றன.

இன்று நிரம்பப்போகும் குளங்களின் நீரில், நாளை தளபதியின் முகத்தைப் பார்க்கப் போகிறார்கள் மக்கள்.




**தி**ண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் கருப்பும் X காவியும் என்ற தலைப்பில் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பில் விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் ஜெயச்சந்திரன் தலைமையேற்க மணிகண்டன் வரவேற்புரையாற்றினார். புலேந்திரன், தமிழினியன், ஆனந்ராஜ், ஆகியோர் முன்னிலை வகித்தனர். இரவிசந்திரன், புலவர் வீர கலாநிதி, ஆ.நாகராஜன் ஆகியோர் உரையாற்றியதைத் தொடர்ந்து திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறி உரையாற்றினார். இறுதியாக பொதுச் செயலாளர் சுப வீ அவர்கள் கறுப்பும் X காவியும் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். செயபால் சண்முகம், நெல்லை சந்தானம், பேரா.பாபு, மாயாண்டி, செல்வராஜ், கருணாநிதி, ஜோசப், வைரமுத்து, அமர்நாத், சரவணன், இளங்கோ, பிரகாஷ், மணிகண்டன், பார்த்திபன், சின்னமனூர் புகழேந்தி, கரிகால பாண்டியன், அறிவுச்செல்வி, வெள்ளைச்சாமி, வடிவேல், தமிழ் முத்து கிருட்டிணமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கண்ணன் நன்றி கூறினார்.

# கீழடி வரலாற்றைப் புரட்டிப் போடும் ஆய்வு

இரா. உமா



இந்த நாட்டின் வரலாறு, கங்கைச் சமவெளியில் இருந்து எழுதப்பட்டிருக்கிறது.. ஆனால் உண்மையில், இந்த நாட்டின் வரலாறு காவிரிக் கரையில் இருந்துதான் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கூறினார் பேரறிஞர் அண்ணா. இந்திய வரலாற்று ஆசிரியர்கள் தங்கள் ஆய்வை, நீண்ட நெடுங்காலமாகக் கங்கைச் சமவெளியில் இருந்து தொடங்கும் வழக்கத்தைக் கைவிட்டு, கிருஷ்ணா, காவிரி, வைகைச் சமவெளிகளில் இருந்து ஆய்வுகளைத் தொடங்க வேண்டும் என்றார் வரலாற்றாசிரியர் வின்சென்ட் ஏ.ஸ்மித்...சிந்து சமவெளி நாகரிகம் என்பது திராவிட நாகரிகமே என்றும், மனித நாகரிகம் இந்தியாவின் தென்கோடியில் இருந்து வட இந்தியா முழுவதும் பரவியது என்றும் கூறுகிறார் தொல்லியல் அறிஞர் ஆர்.டி.பானர்ஜி. இவை அத்தனையும் உண்மை..உண்மையைத் தவிர வேறொன்றும் இல்லை என அடித்துச் சொல்கிறது கீழடி.

மதுரையில் இருந்து 11 கிலோமீட்டர் தொலைவில், வைகை ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள தென்னந்தோப்புகள் சூழ்ந்த கிராமம்தான் கீழடி. அந்தத் தென்னந்தோப்புகளுக்கு நடுவில், சுமார் 110 ஏக்கர் பரப்பளவில் புதைந்து கிடக்கிறது தமிழினத்தின் தொன்மையை அழுத்தமாகச் சொல்லும் வரலாற்றுக் கருவூலம். அதில் ஒரு சிறிது மட்டுமே தற்போது அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது. வெறும் ஒரு ஏக்கர் நிலப்பகுதியைத் தோண்டியதிலேயே. ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட பொருள்கள் அள்ளி எடுக்கப்பட்டுள்ளன. அவை அத்தனையும், கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்கு முந்தைய தமிழர்களின் வரலாற்றைக் காட்டும் சான்றுகளாக இருக்கின்றன. சங்க இலக்கியங்களில் நாம் படித்துச் சுவைத்த, மனக்கண்ணில் ஓடவிட்டுப் பெருமிதப்பட்ட காட்சிகளை எல்லாம் கீழடி நம் கண்முன்னால் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது.

பட்டினப்பாலை சொன்ன ‘உறைகிணற்றுப் புறச்சேரி’ என்ற வரிக்கு. கீழடியில் தோண்டிஎடுக்கப்பட்ட உறை கிணறு உயிர் கொடுத்திருக்கிறது. இப்பூமிப்பந்தின் பல பகுதிகளிலும், மக்கள் இலைதழைகளையும், விலங்குகளின் தோல்களையும் உடலுக்குச் சுற்றித் திரிந்தபோது, இங்கே தமிழர்கள், நெசவுத் தொழிலை அறிந்தவர்களாக, நெய்த ஆடைகளுக்கு வண்ணம் ஏற்றத் தெரிந்தவர்களாக வாழ்ந்திருக்கின்றனர் என்றால் நம்ப முடிகிறதா? கீழடியில் கிடைத்துள்ள ‘தக்ளி’ என்னும் கருவியும், இன்ன பிற பொருள்களும், கட்டிடங்களின் அமைப்புகளும், நம்பித்தான் தீர வேண்டும் என்கின்றன.

சுட்ட செங்கற்களால் ஆன கட்டிடங்கள், தொழிற்சாலைகள் இருந்ததற்கான அடையாளங்கள், சுடுமண் பொம்மைகள், தந்தத்தால் ஆன தாயக்கட்டைகள், கருப்பு சிவப்பு என இரு வண்ணங்களால் ஆன மண்பாண்டங்கள், சூது பவளங்கள் என ஆயிரக்கணக்கில் கீழடி அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. இதற்கு முன்பும் இவை போன்ற பல புதைபொருள்கள், ஆதிச்சநல்லூர், கொடுமணல், அரிக்கமேடு போன்ற இடங்களில் கிடைத்துள்ளன. என்றாலும் கீழடிக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. முதன் முதலாகத் தமிழர்களின் சங்ககால நகரம் ஒன்று இங்குதான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் இருந்தது, இனக்குழு நாகரிகம்தான் என்ற கருத்துத் திணிக்கப்பட்டு வரும் நிலையில், இல்லை, இல்லை. தமிழினம் தனித்துவம் மிக்கதொரு தேசிய இனம் என்பதை, வரலாற்றுப் புரட்டர்களின் செவிப்பறையில் அறைந்து சொல்கிறது கீழடி. அதனால்தான் அகண்ட பாரதக் கனவில் இருக்கும், பா.ஜ.க. அரசு கீழடியைக்கண்டு அஞ்சுகிறது. ஆய்வைத் தொடரத் தயங்குகிறது.

இந்தியா வேதங்களின் நாடு என்றும், வேதக் கலாச்சாரமே இந்தியாவின் கலாச்சாரம் என்றும் கட்டியமைக்கத் துடிக்கும் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.,கூட்டத்தின் அடிமடியிலேயே கை வைப்பதாக இருக்கிறது கீழடி அகழ்வாய்வு சொல்லும் மற்றொரு செய்தி. இதுவரை கீழடியில் கிடைத்துள்ள பொருள்களை ஆய்வு செய்து பார்த்த வகையில், மதம் தொடர்பான சிறு அடையாளம் கூட காணப்படவில்லை. தமிழர்களின் வரலாறு. முன்னோர் வழிபாட்டையும், நடுகல் வழிபாட்டையும் மரபாகக் கொண்டதே தவிர, பெருந்தெய்வ வழிபாடு அதற்குத் தொடர்பில்லாதது என்பதைக் காட்டும் கீழடி, மத அரசியலையும், மாட்டு அரசியலையும் மட்டுமே நம்பியிருக்கும் கூட்டத்திற்குப் பேரிடியாய் இறங்கியிருக்கிறது. இதேபோல் இன்னொன்றையும் கீழடி உணர்த்தி நிற்கிறது.

மதச் சார்பற்ற, சமயச் சார்பற்ற ஒரு தேசிய இனத்தின் மொழி மட்டும் சார்புடையதாகவா இருக்கும்? தமிழ் ஒரு சமயச் சார்பற்ற மொழி என மொழியியல் அறிஞர் கால்டுவெல் எடுத்துரைத்ததை மெய்ப்பிக்கின்றன கீழடி ஆய்வுகள். செத்த மொழியான சமஸ்கிருதமே தமிழ் உள்ளிட்ட திராவிட மொழிகளின் தோற்றுவாய் என சற்றும் கூசாமல் சொல்லி, மொழி வரலாற்றையும் திரித்துக் கூறுவோரின் உச்சத்தலையில் குட்டி, தேவபாஷையான சமஸ்கிருதத்திற்கும், சமயச் சார்பற்ற தமிழினத்தின் தாய்மொழிக்கும் என்ன தொடர்பு எனக் கேட்கிறது கீழடி.

2015, 2016ஆம் ஆண்டுகளில் இரண்டு கட்டங்களாக நடைபெற்ற கீழடி ஆய்வை, இடைக்கால அறிக்கை தயாரிக்க வேண்டும் என்ற நடைமுறைக்கு உதவாத காரணத்தைச் சொல்லி, பாதியிலேயே நிறுத்தியது பா.ஜ.க., அரசு. தோண்டப்பட்ட குழிகள் மூடப்பட்டு, அகழ்ந்தெடுக்கப்பட்ட பொருள்கள் இந்தியாவின் பல பகுதிகளில் உள்ள தொல்லியில் அருங்காட்சியகங்களுக்கு அனுப்பப்படும் என அறிவிக்கப்பட்டது. கீழடியிலேயே அவற்றைப் பாதுகாத்து ஆய்வுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கும்படி, வரலாற்று அறிஞர்களும், தமிழ் அமைப்புகளும், எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட அரசியல் தலைவர்களும் தொடர்ந்து அழுத்தம் கொடுத்தனர். ஆனால் என்ன கொடுமை தெரியுமா? தமிழினத்தின் தொன்மையைப் பறைசாற்றும் கீழடியைத் தமிழகத்தை ஆளும் அதிமுக அமைச்சர்களோ, மாவட்ட ஆட்சித் தலைவரோ வந்து எட்டிக் கூடப் பார்க்கவில்லை.

குஜராத்திலும் பத்து ஆண்டுகளாகத் தொல் பொருள் ஆய்வு நடந்து வருகிறது. அங்கு புதிய சான்றுகள் ஏதும் கிடைத்ததாகத் தெரியவில்லை. இருந்தும் அங்கு ஆய்வுகளைத் தொடர இந்த ஆண்டும் நிதி ஒதுக்கியதோடு, பா.ஜ.க.,வின் பாரதப் பிரதமர் மோடி நேரில் சென்று அதைத் தொடங்கியும் வைத்துள்ளார். அதேநேரம் புது வரலாறு படைக்கத்தக்க சான்றுகளை அள்ளித் தருகின்ற கீழடி புறக்கணிக்கப்படுவதை ஏன் என்று கேட்க வக்கற்ற அரசாக, அதிமுக அரசு இருப்பதால், தமிழர்களின் வரலாற்றுக் கருவூலத்தை மண்ணைப் போட்டு மூடத் துணிந்திருக்கிறது மத்தியில் ஆளும் பா.ஜ.க., அரசு.

பிள்ளையாருக்கு யானைத் தலைமை ஒட்ட வைத்ததுதான் உலகின் முதல் பிளாஸ்டிக் சர்ஜரி சிகிச்சை என அறிவியல் அறிஞர்கள் குழுமியிருந்த அவையில், சற்றும் கூச்சமின்றி சொன்னவர்தான், பாரதப்பிரதமர் மோடி.

# யெச்சூரி – தாக்குதல் தரும் பாடம்

மு.வீரபாண்டியன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

புதுடெல்லியில் பத்திரிகையாளர் சந்திப்பின்போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சீத்தாராம் யெச்சூரி அவர்கள் ஆர்.எஸ்.எஸ் தொண்டர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

அதிர்ச்சி அளிக்கும் இத்தகைய செயல் கட்சியின் தேசிய தலைமை அலுவலகத்திற்குள்ளேயே நடந்துள்ளது. அதிலும் இத்தகைய தாக்குதல் நாடறிந்த தலைவர் மீதே என்றால் சாதாரண மனிதனுக்கு என்ன பாதுகாப்பு என்ற கேள்வி எழுகிறது.

பிஜேபி மத்தியில் அதிகாரத்திற்கு வந்தவுடன் அதிலும் உ.பி.யில் அதிகாரத்திற்கு வந்தவுடன், அவர்கள் பேச்சில், அரசியல் அணுகுமுறையில் உடல் மொழியில் என அனைத்திலும் வன்முறை பிம்பம் தெரிகிறது தங்கள் மீதான விமர்சனங்களை உரையாடல் ரீதியான எதிர்மறைகளைக் கூட அவர்கள் ஏற்பதில்லை. சகிப்பின்மையின் உச்சத்திற்கேற்ப சென்று படுகொலையிலும் ஈடுபடுகிறார்கள்.

தபோல்கர், பன்சாரே, கல்புர்க்கி



போன்ற அறிஞர்கள் இந்து அடிப்படை வாத கருத்தியிலாளர்களால் கொல்லப்பட்டார்கள் மாட்டு இறைச்சியை அரசியலாக்கி, உணாவில், தாத்திரியில் பெரும் பதற்றங்களை இவர்கள்தான் தோற்றுவித்தார்கள்.

மொழிவழித் தேசிய இனங்களின் அரைக் கூட்டிசைவு நாடு தான் இந்தியா! முழுக் கூட்டிசைவு நோக்கி நாடு பயணிக்க வேண்டும். அரசியல் சாசன இலக்கும் இதுதான். இந்தியைத் திணிப்பதன் மூலம் இந்துமதக் கருத்தியலைத் திணிப்பதன் மூலம் ஒரே சட்டம் ஒரே நாடு என்ற கோஷத்தின் மூலம் இறுகிய கூட்டிசவை, ஒற்றுமையைச் சீர்குலைக்கிறது.

மாநிலங்களின் அதிகாரங்களுக்குள் அப்பட்டமாக பிஜேபி மத்திய அரசு தலையிடுகிறது.

தேசியதிட்டக்கமிஷன், ஐந்தாண்டு திட்டமிடும் முறை போன்ற ஜனநாயக நிறுவனங்கள் கணக்கிடப்பட்டு அதன் அதிகாரங்களை அதிபர்போல் பிரதமர் குவித்துக் கொள்கிறார்.

புகழ்வாய்ந்த அயலுறவுக் கொள்கை கைவிடப்படுகிறது நாடாளுமன்ற விவாத முறைகள் தவிர்க்கப்படுகின்றன. குரல் வாக்கெடுப்பில், கைகளை உயர்த்தி எண்ணுவது போன்ற முறையில் மசோதாக்கள் நிறைவேற்றப்படுகின்றன.

மொத்தத்தில் ஜனநாயகம், பன்முகம், மதச்சார்பின்மை, பொதுத்துறை என யாவும் போராட்டத்தால் சூழப்பட்டுள்ளன.

இதனை முறியடிக்க குறைந்த பட்சம் ஒத்த கருத்துடையோர் ஒரு பொதுமேடையை உருவாக்க வேண்டும் பெரியார், அம்பேத்கர், மார்க்ஸ், நேரு கருத்தியலாளர்கள் ஒன்றிணைவது அவசியம். அதனைத் தான் தோழர் யெச்சூரி மீதான தாக்குதல் காட்டுகிறது. ●

## வெட்கம், வேதனை, அவமானம்!

–சுபவீ

தி.மு.கழக ஆட்சியில், தலைவர் கலைஞர் முதல்வராகவும், தளபதி துணை முதல்வராகவும் இருந்தபோது, இந்தியாவின் முதல் பெண் மருத்துவரான முத்துலட்சுமி அம்மையார் பிறந்த புதுக்கோட்டையில், அரசு மருத்துவ மனைக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. 2011இல் அதிமுக ஆட்சி வந்தவுடன் அந்தத் திட்டம் அப்படியே கிடப்பில் போடப்பட்டு விட்டது. பிறகு 2015ஆம் ஆண்டு, வழக்கம்போல், 110 விதியின் கீழ் புதிய திட்டம் போல அது மீண்டும் அறிவிக்கப்பட்டது. அந்த அரசு மருத்துவமனைதான், 09.06.2017 அன்று புதுக்கோட்டையில், முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

அவ்விழா அழைப்பிதழில், அப்பகுதியைச் சேர்ந்த திமுக சட்டமன்ற உறுப்பினர்களின் பெயர்களும் இடம் பெற்றிருந்தன. ஆனால் விழாவில்



கலந்துகொள்ளச் சென்றபோது, சட்டமன்ற உறுப்பினர்கள் ரகுபதி, பெரியண்ணன் அரசு, மெய்யநாதன் ஆகிய மூவரும் தடுத்து நிறுத்தப்பட்டுக் கைது செய்யப்பட்டுள்ளனர். திமுக வைக் கண்டு தமிழக அரசு ஏன் இவ்வளவு அச்சம் கொள்கிறது? ஏன் இந்த ஜனநாயகப் படுகொலையைச் செய்கிறது?

வெட்கம், வேதனை, அவமானம்!

## கீழடி தொடர்ச்சி...

என்ன செய்வது அவர்களின் வரலாற்று எல்லை அவ்வளவுதான். புராணங்களோடு நின்று போனவை. ஆனால் தமிழர்கள். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அறிவியலோடு இயைந்த நாகரிக வாழ்க்கையைக் கொண்டவர்கள்.

வடக்கு வாழ்கிறது. தெற்கு தேய்கிறது என்றார் பேரறிஞர் அண்ணா. ஆனால் அதற்கு முன் தெற்கு வாழ்ந்திருக்கிறது. மிக உயர்ந்த நாகரிக வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறது. என்பதை உலகிற்கு அழுத்தமாக எடுத்துச் சொல்லும் தொல்பொருள் ஆய்விடம் கீழடி. 'தங்கள் இனத்தின் தொன்மை வரலாற்றை அறிந்து கொள்ள ஆவலோடு காத்திருக்கும் தமிழக மக்களுக்கு, கீழடி ஆய்வை மத்திய அரசு பாதியில் நிறுத்தியது ஏமாற்றத்தையும், வேதனையையும்



தருவதாக உள்ளது என ஒட்டுமொத்த தமிழகத்தின் உள்ளக்கிடக்கையை, மத்தியக் கலாச்சாரத் துறை இணையமைச்சர் மகேஷ் சர்மாவுக்குக் கடிதத்தின் வழி வெளிப்படுத்தினார் தமிழக எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின். இப்போது கீழடியில் ஆய்வைத் தொடர்வதற்கான நிதியை ஒதுக்கியிருப்பதாக மத்திய அரசு அறிவித்திருக்கிறது. அறிவிப்பு வந்திருக்கிறதே ஒழிய இன்னும் ஆய்வுகள் தொடங்கப்படவில்லை..இதுவரை ஆய்வினை முன்னின்று நடத்திய அதிகாரி அமர்நாத் ராமகிருஷ்ணனை மாற்றிவிட்டு, புதியவர் ஒருவரை நியமித்து, தன் 'ராஜதந்திரத்தைக் காட்டியிருக்கிறது பா.ஜ.க. அரசு.

சிந்துவெளியில் கிடைத்த, காளைமாட்டின் குறியீட்டையே குதிரையாக்கி, சிந்து வெளி நாகரிகத்தை சரஸ்வதி நாகரிகம் என்று சொல்லி, இல்லாத சரஸ்வதி ஆற்றைத் தேட 100 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ள ஆரிய மாயையின் ஆட்டம், கீழடியில் நடக்காது. நடக்கவும் விட மாட்டோம் என்பதில், தமிழக வரலாற்று அறிஞர்கள் உறுதியுடன் உள்ளனர். மீண்டும் கீழடியில் அகழ்வாய்வுகள் உடனடியாகத் தொடங்கப்பட, மத்திய, மாநில அரசுகளுக்கு அழுத்தம் தர தொடர் முன்னெடுப்புகளை எடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.